தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, மாசி 2, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 பிப்ரவரி 14, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் ***திரு. ப. தனபால்*** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எவ்வது உறைவது உலகம்; உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு."

உலகத்தில் உள்ள சான்றோர்கள் எப்படி வாழ்கிறார்களோ அதுபோல அவர்களைப் பின்பற்றி அவர்கள் கூறும் வாழ்வியல் நெறிப்படி வாழ்வதே உயர்ந்த அறிவுடைமை ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

நியாய விலை கடைக்குக் கட்டடம்

***14700—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, தருமதானபுரம் ஊராட்சியில் உள்ள பகுதிநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2019 பிப்ரவரி 14

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், உளுத்துக்குப்பை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் தருமதானபுரம் பகுதிநேர நியாய விலைக் கடை 207 குடும்ப அட்டைகளுடன் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தப் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு தருமதானபுரம் ஊராட்சியில் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகமே என் குடும்பம், தமிழக மக்களே என் மக்கள்' என, வாழும் காலம் வரை தமிழக மக்களுக்காகவே வாழ்ந்து நம் நெஞ்சமெல்லாம் தெய்வமாக வீற்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஏழை எளிய மக்களை நேசித்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஏழைகளே இல்லாத ஏற்றமிகு தமிழகம் காண விரும்பியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இம்மூவரின் வழியில், பொங்கல் பண்டிகைக்கு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுடன் ரூபாய் ஆயிரம் வழங்கியது மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் 60 இலட்சம் குடும்பங்களுக்கு தலா ரூபாய் இரண்டாயிரம் சிறப்பு நிதியாக வழங்கப்படும் என (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மயிலாடுதுறை தொகுதி, தருமதானபுரம் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அம்மாவின்

2019 பிப்ரவரி 14]

அரசுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மயிலாடுதுறை தொகுதி, கொற்றவநல்லூர் கிராமத்தில் 142 குடும்ப அட்டைகள் உள்ளன. நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டு தயார் நிலையில் உள்ளது. நீடூர் நியாய விலைக் கடையிலிருந்து, கொற்றவநல்லூரைப் பிரித்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மயிலாடுதுறை தொகுதி, மானாந்திரவாசல் கிராமத்தில் 152 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்தக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் சேத்தூர் நியாய விலைக் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்க வேண்டிய நிலை உள்ளது. எனவே, இந்த இரண்டு ஊர்களுக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள் மேலும் இரண்டு பகுதிநேர கடைகளை அமைத்துக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது நீடூர் முழுநேர நியாய விலைக் கடை, 875 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கொற்றவநல்லூர் பகுதியானது 3.5 கிலோ மீட்டர் தூரத்திலே இருப்பதாலும், 150 கார்டுகளைக் கொண்டிருப்பதாலும், சட்ட விதிகளுக்குட்பட்டு, இந்தக் கடையைப் பிரித்துக் கொடுப்பதற்கு உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அனுமதியையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அனுமதியையும் பெற்று, இந்தக் கடை திறக்கப்படும். அதுவரையிலே தொடர்ந்து பொருட்கள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, மயிலாடுதுறை வட்டம், சேத்தூர் முழுநேர நியாய விலைக் கடையைப் பிரித்து, மானாந்திரவாசல் பகுதியிலும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துக்கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். இதுவும் சட்ட விதிகளுக்குட்பட்டு இருப்பதனால், தாய்க் கடையிலே 703 குடும்ப அட்டைகளும், பகுதிநேர கடையான மானாந்திரவாசலிலே

[2019 பிப்ரவரி 14

150 குடும்ப அட்டைகள் இருப்பதாலும், 1.5 கிலோ மீட்டர் தூரம் அதிகமாக இருப்பதாலும், இந்தக் கடையையும் பிரித்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியையும் பெற்று விரைவில் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கடைகளும் பகுதிநேர கடைகளாகப் பிரித்துத் தரப்படும் என அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மாவின் அரசுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், தளிஞ்சி ஊராட்சி, தளிஞ்சியில் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்தியாவிலேயே முன்னோடியாக, கூட்டுறவுத் துறையின் மூலமாக பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 32,913 கடைகள் மூலமாகப் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி பொருட்களை வழங்கிக்கொண்டிருக்கின்றது. நமது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 1,209 முழுநேர நியாய விலைக் கடைகளுக்கும், 721 பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்கும் என இதுவரை ஏறத்தாழ*

2019 பிப்ரவரி 14]

1,930 கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தக் கடைக்கு சட்ட விதிகளுக்குட்பட்டு, உறுப்பினர் அவர்களே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சிறப்பு நிதித் தொகுப்பிலிருந்தோ, மாவட்ட ஊராட்சி முகமை நிதித் தொகுப்பிலிருந்தோ கட்டிக்கொள்ளலாம். அவ்வாறு செய்யும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

புதிய மின்மாற்றி

***30192—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, இராஜேந்திரபுரம் ஊராட்சி, எருக்கலக்கோட்டையில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆலங்குடி தொகுதி, இராஜேந்திரபுரம் ஊராட்சி, எருக்கலக்கோட்டை பகுதியில் சீரான மின்சாரம் வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஏற்கெனவே இருந்த 100 கே.வி. டிரான்ஸ்பார்மரோடு கூடுதலாக ஒரு 100 கே.வி. டிரான்ஸ்பார்மர் 17-5-2018-ல் நிறுவப்பட்டு தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.